# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.44/2022 P.W.8

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்து கிருஷ்ணன் | த-பெ | காளிமுத்து |
| ஊர்: | : | ஓசூர் | | |
| வயது: | : | 43/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.06.2026**

**எதிரி ஆஜர். அரசு தரப்பில் முன் பட்டியலிட கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது. சாட்சி கிருஷ்ணகிரி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளிக்கிறார்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஓசூரில் வசித்து கிருஷ்ணகிரி மாவட்ட மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் 2017 ம் வருடம் சார்பு ஆய்வாளராக 09.09.2017 அன்று 10.15 மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது தாரிக் அன்வர் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.531/2017 பிரிவுகள் 294(b), 323, 427, 448, 379, 506(1) ன் இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 5.** பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவ இடம் அன்றைய தினமே 11.15 மணிக்கு சென்று சம்பவ இட சாட்சிகள் பக்கீர் முகமது மற்றும் பீர்முகமது ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 6.**

வழக்கின் எதிரிகளை தேடி சென்ற நிலையில் 09.09.2017 அன்று 11.15 மணியளவில் மணிமேகலை தெருவில் உள்ள வாதியின் வீடு முன்பாக நின்று கொண்டிருந்தபோது வழக்கின் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இந்த வழக்கின் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்தவர் திருமதி நர்மதா அரசு மருத்துவமனை காரைக்குடி என்பவரை விசாரணை

செய்து அவரிடம் இருந்து காய சான்றிதழ்கள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வாதியின் வீட்டிற்கு சென்று வழக்கு சொத்துகளை அத்தாட்சியில் சாட்சிகள் பழனிசாமி மற்றும் சாகுல் ஹமீது ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அத்தாட்சி அசாஆ 7.** வழக்கு சொத்துகளை படிவம் 95 வாயிலான கனம் நீதிமன்றத்தின் ஆஜர் செய்தேன். **படிவம் 95 அசாஆ 8. உடைந்த பிளாஸ்டிக் துண்டு இரண்டு - சா.பொ1. உடைந்த கண்ணாடி துண்டு ஒன்று- சா.பொ.2.** வழக்கின் சட்டப்பிரிவை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை கனம் நீதிமன்றத்தில் சமர்பித்தேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ 9.** வழக்கின் விசாரணையை நிறைவு செய்து 21.09.2017 அன்று மேற்சொன்ன பிரிவின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுக்க ஏன் கால தாமதம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் கால தாமதம் ஏற்பட்டது. புகாரில் புகார்தாரர் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் புகார்தாரர் அவருடைய தாயார் சித்தி ஆயிஷா தகப்பனார் உமர் பாரூக் அவர் சகோதரர் உஸ்மான் அலி ஆகியோர் மட்டும்தான் இருந்தார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வழக்கில் சித்தி ஆயிஷா மற்றும் உஸ்மான் அலி ஆகியோர்களை சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அடித்து நொறுக்கியதாக சொல்லப்படும் பொருட்களை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லும் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி துண்டுகள் ஆகியவை சேதப்படுத்தப்பட்ட பொருள்களில் இருந்து தான் எடுக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது தொந்தரவுகள் ஏற்பட்டதாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். உமர்பாரூக் என்பவருக்கும் எதிரிக்கும் வீடு சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். தாவா வீடு 1வது எதிரிக்கு சம்பவ சமயத்திற்கு முன்பே இனாம் செட்டில்மண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். உமர்பாரூக் மற்றும் அசா1 10 அடையாளம் தெரியாத நபர்கள் வந்திருந்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு. வழக்கில் மருத்துவரை சாட்சியாக விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். எதிரிகள் மருத்துவரிடம் மரக்குச்சியால் தாக்கியதாக சொல்வதற்கு மேற்படி மரக்குச்சியை கைப்பற்றினேனா என்றால் தன்னை கையால் அடித்ததாக அசா1 மருத்துவரிடம் எனது விசாரணை மூலமாக சொல்லியுள்ளார்.

1ம் எதிரி 28.07.2017 அன்று காரைக்குடி வடக்கு காவல் நிலையத்திற்கு வந்து வீடு சம்பந்தமாக அசா1 க்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்த விபரம் எனக்கு தெரியுமா

என்றால் நினைவில் இல்லை. பட்டியல் சாட்சி 4 கனி என்பவருடைய அப்பா பெயர் முகமது உசைன் என்று சாட்சியத்தில் சொல்லியிருந்தால் அது சரியா தவறா என்றால் தவறு. வீடு சம்பந்தமாக அசா1 க்கும் எதிரிக்கும் பிரச்சனை வைத்துகொண்டு அசா1 அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன்அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்துதயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.24 11:07:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.